# ஜீவ நதி

தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி (வெளி. 22:1)

JANUARY 2024

## HAPPY NEW YEAR

## 2024

SHARJAH TAMIL CONGREGATION (CSI KANYAKUMARI DIOCESE)

Private circulation only.

# ஷார்ஜா தமிழ் கான்கிரிகேஷன்

தென்னிந்தியத் திருச்சபை - கன்னியாகுமரிப் பேராயம்

# ஜீவநதி

ஜனவரி 2024 - இதழ் 197

**நான் உனக்கு முன்னே போய்,**

**கோணலானவைகளைச் செவ்வையாக்குவேன்.**

(ஏசாயா 45:2)

## SHARJAH TAMIL CONGREGATION

**(CSI KANYAKUMARI DIOCESE)**

**P.O.Box : 46121, Sharjah, U.A.E. Tel. / Fax : 06-5680727, Mobile : 050-9367576**

**For private circulation only**

# அனுதின மன்னா

**கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள்.**
**(சங்கீதம் 119:1)**

| தேதி | நாள் | காலை எபிரெயர் யாக்கோபு | மனன வசனம் | | மாலை சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | திங் | 8:1-6 | பூமியிலே … இருக்கிறார்களே | 8:4 | 69:1-8 |
| 2 | செவ் | 8:7-13 | அந்த … ஜனமாயிருப்பார்கள் | 8:10 | 69:9-18 |
| 3 | புத | 9:1-5 | எப்படியெனில் … ஸ்தலமென்னப்படும் | 9:2 | 69:19-27 |
| 4 | வியா | 9:6-10 | இரண்டாம்கூடாரத்திலே … செலுத்துவான் | 9:7 | 69:28-36 |
| 5 | வெள் | 9:11-15 | வேள்ளாட்டுக்கடா … பண்ணினார் | 9:12 | 70:1-5 |
| 6 | சனி | 9:16-22 | ஏனென்றால் … வேண்டும் | 9:16 | 71:1-12 |
| 7 | ஞா | 9:23-28 | கிறிஸ்துவும் … தரிசனமாவார் | 9:28 | 71:13-24 |
| 8 | திங் | 10:1-10 | ஆப்பொழுது நான் … என்றார் | 10:7 | 72:1-10 |
| 9 | செவ் | 10:11-18 | அவர்களுடைய … சொல்லுகிறார் | 10:17 | 72:11-20 |
| 10 | புத | 10:19-29 | நியாயத்தீர்ப்பு … இருக்கும் | 10:27 | 73:1-10 |
| 11 | வியா | 10:30-39 | பழிவாங்குதல் … அறிவோம் | 10:30 | 73:11-20 |
| 12 | வெள் | 11:1-7 | விசுவாசமில்லாமல் … விசுவாசிக்கவேண்டும் | 11:6 | 73:21-28 |
| 13 | சனி | 11:8-16 | ஆனபடியால் … பிறந்தார்கள் | 11:12 | 74:1-10 |
| 14 | ஞா | 11:17-26 | இனிவரும் … எண்ணினான் | 11:26 | 74:11-23 |
| 15 | திங் | 11:27-34 | விசுவாசத்தினாலே … அடைந்தார்கள் | 11:33 | 75:1-10 |
| 16 | செவ் | 11:35-40 | கல்லெறியுண்டார்கள் … அநுபவித்தார்கள் | 11:37 | 76:1-12 |
| 17 | புத | 12:1-6 | கர்த்தர் … மறந்தீர்கள் | 12:6 | 77:1-10 |
| 18 | வியா | 12:7-13 | அவர்கள் … சிட்சிக்கிறார் | 12:10 | 77:11-20 |
| 19 | வெள் | 12:14-21 | ஏனென்றால் … காணாமற்போனான் | 12:17 | 78:1-10 |
| 20 | சனி | 12:22-28 | ஆதலால் … பற்றிக்கொள்ளக்கடவோம் | 12:28 | 78:11-20 |
| 21 | ஞா | 13:1-9 | தேவவசனத்தை … பின்பற்றுங்கள் | 13:7 | 78:21-30 |
| 22 | திங் | 13:10-19 | நமக்கு … அதிகாரமில்லை | 13:10 | 78:31-40 |
| 23 | செவ் | 13:20-25 | இயேசுகிறிஸ்துவைக் … ஆமென் | 13:21 | 78:41-50 |
| 24 | புத | 1:1-8 | உங்களில் … கொடுக்கப்படும் | 1:5 | 78:51-60 |
| 25 | வியா | 1:9-18 | சோதனையை … பெறுவான் | 1:12 | 78:61-72 |
| 26 | வெள் | 1:19-27 | திக்கற்ற … பக்தியாயிருக்கிறது | 1:27 | 79:1-13 |
| 27 | சனி | 2:1-7 | என் … தெரிந்துகொள்ளவில்லையா? | 2:5 | 80:1-10 |
| 28 | ஞாயி | 2:8-13 | ஏனென்றால் … மேன்மைபாராட்டும் | 2:13 | 80:11-19 |
| 29 | திங் | 2:14-17 | அப்படியே … செத்ததாயிருக்கும் | 2:17 | 81:1-8 |
| 30 | செவ் | 2:18-21 | தேவன் … நடுங்குகின்றன | 2:19 | 81:9-16 |
| 31 | புத | 2:22-26 | ஆதலால் … காண்கிறீர்களே | 2:24 | 82:1-8 |

# ஆயரிடமிருந்து...

கிறிஸ்து இயேசுவில் மிகவும் பிரியமானவர்களே,

ஒவ்வொரு நாளும் புதிய புதிய நன்மைகளினால் நம்மை நிறைத்து, வளமாய் நம்மை நடத்திவரும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் இறைமக்கள் அனைவருக்கும் ஜனவரி மாதத்தின் நல்வாழ்த்துதலையும், புத்தாண்டு நல்வாழ்த்துதலையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். வருடத்தின் முதல் மாதத்தில் இறை ஆசிகள் பலவற்றைப் பெற்று மகிழ்ந்து வாழவும், நாம் எடுத்திருக்கின்ற தீர்மானத்தில் நிலைத்திருக்கவும் இறைவனை வேண்டிக் கொள்கிறேன்.

கடந்த மாதம் நடைபெற்ற கிறிஸ்மஸ் பாடல் ஆராதனை, பிள்ளைகளின் கலைநிகழ்ச்சிகள் மிகச் சிறப்பாய் நடைபெற கிருபை செய்த ஆண்டவரைப் போற்றுகிறேன். சிறப்பான பங்களிப்புகளைத் தந்த திருச்சபையின் செயற்குழு அங்கத்தினர்கள், Junior Church ஆசிரியர்கள், பிள்ளைகள், பெண்கள் ஐக்கிய சங்கத் தலைவி, செயலர், அங்கத்தினர்கள், நமது பாடகர் குழு பொறுப்பாளர் உறுப்பினர்கள், விசுவாச குடும்பத்தார் அனைவருக்கும் மனதார நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு கிறிஸ்மஸ் குடும்ப பாடல் ஆராதனை, கிறிஸ்மஸ் சிறப்பு தொழுகை இவைகளிலும் கலந்து சிறப்பித்த அனைவரையும் அன்புடன் வாழ்த்துகிறேன்.

எண்ணம்தான் ஒரு செயலுக்கு ஆரம்பமாக இருக்கிறது. நம் மனதின் எண்ணங்கள் செம்மையாய் இருக்கும்போது, வாழ்வின் உண்மையை நாம் புரிந்து கொள்ளலாம். நம் ஆழ்மனதில் முன்னேற்றத்திற்கான எண்ணங்களை நாம் விதைக்கும்போது, நம்முள் இருக்கும் இறைவனின் அற்புத சக்தி அந்த எண்ணங்களை வாழ்வின் வெற்றிக்கனிகளாய் விளங்கப்பண்ணும். நம் உள்ளத்தில் உறைகின்ற உயரிய சிந்தனைகள் நம் வாழ்வில் அற்புதமான வெற்றிகளையும், மகிழ்ச்சியையும் உருவாக்கித் தருகின்றன.

புதிய வருடத்தில் அடியெடுத்து வைத்திருக்கும் நாம் நமது உள்ளத்தில் நல்ல எண்ணங்களை விதைத்து முன்னேற்றத்தையும், மகிழ்ச்சியையும், வெற்றியையும் பெற்றுக்கொள்ள இறைஅருளை நாடுவோம். இவ்வருடம் முழுவதும் இறைவன் நம்முன் சென்று **“கோணலானவைகளைச் செவ்வையாக்குவார்”.**

இறை ஆசி நம் அனைவரோடும் தங்கி இருப்பதாக. **ஆமென்.**

கிறிஸ்துவின் திருப்பணியில்,
**Rev. S. சுஜின் பிரிட்டோ,**
சபை ஆயர் மற்றும் குடும்பம்.

# அருளுரைப்பகுதி

## பாதையைச் செவ்வையாக்கும் ஆண்டவர்

**திருமறைப் பகுதி:** ஏசாயா 45:1-6 **தியான வசனம்:** ஏசாயா 45:2

***"நான் உனக்கு முன்னே போய், கோணலானவைகளைச் செவ்வையாக்குவேன்."***

கோரேஸ், மன்னனாக முடிசூட்டப்பட்டபோது அவரது வலதுகையைப் பிடித்து கடவுள் சொன்ன வார்த்தைதான் இது. காரணம் நான் கர்த்தர், இதை நீயும் இந்த உலகமும் அறிந்துகொள்ளவேண்டும். எனவே நான் உனக்கு முன்னே செல்லுவேன் என்றார்.

ஒருநாள் ஒரு தந்தை தன் மகனைத் தலைவனாக நியமிக்க விரும்பினார். அவனை காட்டிற்குள் அழைத்துச் சென்று, ஒரு இடத்தில் அமர்த்திவிட்டு, நாளை காலை சந்திப்போம் மகனே என்று சொல்லி விடைபெற்றார். தனியாக விடப்பட்டதும் பயம் அவனை பிடித்துக் கொண்டது. சூரியன் மறைந்ததும் இருளில் காற்றில் அசைந்த ஒவ்வொரு செடியும் ஒரு பெரிய சிங்கத்தின் நிழல்போல் தெரிந்தது.

இதற்கிடையே நேரம் செல்லச் செல்ல பயங்கர மிருகங்களின் குரல் கேட்க ஆரம்பித்தது. சற்று நேரத்திற்குப் பிறகு அவன் இருந்த இடத்தின் அருகிலேயே ஒரு சிங்கம் கெர்சித்தது. அவன் நடுங்கினான். தன்னுடைய முடிவு நெருங்கிவிட்டதாக நினைத்தான். சிங்கம் அவன்மேல் பாய்வதற்கு ஆயத்தமாக ஓடிவருவது அவனுக்குக் கேட்டது. இறப்பதற்கு ஆயத்தமாக கண்களை மூடிக்கொண்டான்.

திடீரென்று துப்பாக்கியால் சுடும் சத்தமும், சிங்கம் வீழ்ந்து சாகும் சத்தமும் கேட்டது. அவன் ஆச்சரியப்பட்டான். யார் இந்தக் காட்டில் இந்நேரத்தில் வந்தார்கள் என்று குழம்பினான். யாராக இருந்தால் என்ன, உன்னை யாரோ பாதுகாக்கிறார்கள் என்று அவனுடைய உள்மனம் சொல்லிற்று. உடனே எவ்வித தயக்கமுமின்றி ஒரு மரத்தில் சாய்ந்து தூங்கினான். காலையில் எழுந்து நேராக வீட்டை நோக்கி நகர்ந்தான். பாதி வழியில் தன் தந்தையைக் கண்டு, ஏன் அப்பா என்னைத் தனியாகத் தவிக்கவிட்டீர்கள்? யாரோ ஒருவர் எனக்கு உதவி செய்திராவிட்டால் சிங்கம் என்னைச் சாப்பிட்டிருக்கும் என்றான். தந்தை அவனைப் பார்த்து, மகனே, இரவில் நீ தனியாக இல்லை. உனக்குத் தெரியாமல் நான் உன்னைக் கவனித்துக் கொண்டிருந்தேன். உன்னைச்

சாப்பிட வந்த சிங்கத்தைக் கொன்றதும் நான்தான் என்றார் தந்தை. அன்பு மிகுதியால், மகன் தகப்பனைக் கட்டி அணைத்துக்கொண்டான்.

அன்பானவர்களே, நாம் அனேக வேளைகளில் தனியாக விடப்பட்டது போலவும், பயங்கரமான ஆபத்தான நிலையில் இருப்பதுபோலத் தோன்றினாலும், நம்மைப் பாதுகாப்பதற்காக நம்மோடு இருக்கிறார். நம் முன்னே செல்கிறார். ஆண்டவர் நம் முன் செல்ல என்னென்ன அதிசயங்கள் நடக்கும்.

1. **கடினங்கள் இலகுவாகும்:**
   **கர்த்தர் பகலில் அவர்களை வழிநடத்த மேகஸ்தம்பத்திலும், இரவில் அவர்களுக்கு வெளிச்சங்காட்ட அக்கினிஸ்தம்பத்திலும் அவர்களுக்கு முன் சென்றார்.(யாத். 13:21)**

   பெரிய பிரச்சனைகள், போராட்டங்கள் நமக்குப் பல நேரங்களில் கடினமாகத் தோன்றலாம். ஆனால் கடவுளின் வல்லமையைவிட அவை பெரிதானவை அல்ல. எனவே கடினங்களை இலகுவாக்கும் கடவுளை நோக்கிப் பாருங்கள்.

   இஸ்ரவேல் மக்கள் பட்ட கடினபாடுகள் ஏராளம். அவர்கள் அவைகளினிமித்தம் கூக்குரலிட்டார்கள். அழுது புலம்பினார்கள். பார்வோனின் இருதயம் கடினப்பட்டபடியினால் இஸ்ரவேலர் மிகவும் கஷ்டப்பட்டார்கள். ஆண்டவர் அவர்களின் கூப்பிடுதலைக் கேட்டார். கண்ணீரைக் கண்டார்.

   இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்பட்டபோது பார்வோன் அவர்களை மீண்டும் பின்தொடர்ந்தான். இஸ்ரவேலர் பயந்து திகைத்தபோது, யாத்.14:14-ல் “கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார், நீங்கள் சும்மாயிருப்பீர்கள்” என்றார். மோசே தன் கையை கடல்மேல் நீட்டவே, கடலின் தண்ணீர் பிரிந்து போயிற்று. இஸ்ரவேலர் உலர்ந்த வெட்டாந்தரை வழியாக நடந்து போனார்கள்.

   யோசுவாவின் காலத்தில் இஸ்ரவேலர் யோர்தானைக் கடந்துபோக, ஆசாரியர்கள் உடன்படிக்கைப் பெட்டியைச் சுமந்து வந்தார்கள். தண்ணீர் அறுப்புக்காலமானதால் கரைபுரண்டு ஓடினது. ஆனால் ஆசாரியர்களின் கால்கள் தண்ணீரில் பட்ட உடனே குவியலாக நின்றது. இஸ்ரவேலர் எல்லாரும் உலர்ந்த தரைவழியாய் கடந்துபோனார்கள். கடவுள் கடினங்களை இலகுவாக்கினார்.

2. **சோதனைகள் சாதனைகளாகும்:**

**சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான், அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான். (யாக்கோபு 1:12).**

அமைதியான கடல் திறமையான மாலுமிகளை உருவாக்குவதில்லை. கடவுள் நமக்கு இனிமையான வாழ்க்கையை மட்டும் தருவார். சோதனைகளையும், துன்பங்களையும் அவர் தருவதில்லை என்பது இயல்பான சிந்தனை. ஆனால் சில காரியங்களை நாம் சோதனைகள் வழியாகவே கற்றுக் கொள்ளமுடியும். ஒவ்வொரு சோதனையிலும் பல ஆசீர்வாதத்தை இறைவன் மறைத்து வைத்திருக்கிறார்.

பவுலுக்கு வந்த சோதனைகள் பல. ஒருமுறை கப்பலில் சென்றபோது யூரோக்கிலிதோன் என்னும் கடுங்காற்றினால் அலைக்கழிக்கப்பட்டார். அதில் தப்பிப் பிழைத்து மெலித்தா தீவை அடைந்தபோது, குளிருக்காக நெருப்பை மூட்டினார்கள். பவுல் சில விறகுகளை வாரி அந்த நெருப்பிலே போடுகையில் விரியன் பாம்பு ஒன்று அவன் கையைக் கவ்விக் கொண்டது. அது அவன் கையில் தொங்கிக் கொண்டிருந்தது.

அந்நியரான அந்தத் தீவார் அதைக் கண்டபோது, இந்த மனுஷன் கொலை பாதகன். அவன் வீக்கங்கண்டு, சடிதியாய் விழுந்து சாவனென்று அவர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் பவுலோ, அதைத் தீயிலே உதறிப்போட்டு, ஒரு தீங்கும் அடையாதிருந்தான். இதைப் பார்த்த மக்கள் இவன் தேவனென்று சொல்லிக் கொண்டார்கள்.

இறைவன் நமது சோதனைகளை சாதனையாக்குகிறவர். சோதனை தாண்டிச் செல்ல பெலன் தருபவராகவும் இருக்கிறார்.

3. **நடக்காதவைகள் நடக்கும்:**

**என் குமாரத்தி மரண அவஸ்தைப் படுகிறாள், அவள் ஆரோக்கியம் அடையும்படிக்கு நீர் வந்து, அவள்மேல் உமது கைகளை வையும், அப்பொழுது பிழைப்பாள் என்று அவரை மிகவும் வேண்டிக்கொண்டான். (மாற்கு 5:23).**

யவீரு தேவாலயத் தலைவன். ஆலயத்தில் இறை பிரசன்னத்தைக் கண்டவன். ஆனால் தன் மகள் மரண அவஸ்தையாயிருந்தபோது இயேசுவிடம் வந்து, தன் பிள்ளைக்காக வேண்டி நின்றான். இயேசுவின் வல்லமை தன் மகளைச் சுகமாக்கும் என்று நம்பி வந்தார்.
இயேசுவும் யவீருடன் அவன் வீட்டிற்குச் சென்றார். வழியில் யவீருவின் வேலைக்காரன் ஒருவன் வந்து, மகள் இறந்து போனாள் என்ற துக்கச் செய்தியைக் கூறினான். இயேசு அவனிடம், "பயப்படாதே, விசுவாசமுள்ளவனாயிரு" னன்றார் (மாற்கு 5:36). யவீருவும் விசுவாசம் கொள்கிறார்.

இயேசுவால் எல்லாம் கூடும் என்று நம்பி, துக்கச் செய்தியைக் கேட்டபிறகும் இயேசுவின் கூடவே சென்றான். இயேசு யவீருவின் வீட்டிற்கு வந்து சந்தடியையும், அழுது புலம்புகிறவர்களையும் கண்டு, "நீங்கள் சந்தடி பண்ணி அழுகிறதென்ன? பிள்ளை மரிக்கவில்லை, நித்திரையாயிருக்கிறாள்" என்றார். எல்லாரும் அவரைப் பார்த்து நகைத்தார்கள். இயேசு பிள்ளையின் கையைப் பிடித்து, சிறுபெண்ணே எழுந்திரு என்றார். உடனே சிறுபெண் எழுந்து நடந்தாள். எல்லாரும் ஆச்சரியப்பட்டு பிரமித்தார்கள்.

இன்றும் நம்பிக்கையோடு நம் ஆண்டவர் இயேசுவை வேண்டிக் கொள்ளும்போது நடக்காது என்று நினைப்பதும் நடக்கும். இதைப்போல நம்பிக்கையோடு வந்த நூற்றுக்கதிபதியின் வேலைக்காரனும், பதினெட்டு வருடம் பலவீனப்படுத்தப்பட்ட பெண்ணும், முப்பத்தெட்டு வருடம் வியாதியாய் இருந்த மனுஷனும் சுகம் பெற்றனர்.

நாமும் பதிய வருடத்தில் இறை அருளால் புதிய நன்மைகள் பல பெற்று வாழ்வோம்.

இறை ஆசி நம் அனைவரோடும் தங்கி இருப்பதாக. ஆமென்.

**Rev. S. சுஜின் பிரிட்டோ,**
சபை ஆயர்

# செயலர் மடல்

***"வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர், உமது பாதைகள் நெய்யாய்ப் பொழிகிறது."(சங்கீதம் 65:11)***

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

மீண்டும் ஒரு புதிய வருடத்தைக் காணச்செய்த ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் திருச்சபையின் விசுவாசிகள் யாவருக்கும் சபைக்குழுவின் சார்பில் மகிழ்ச்சி நிறைந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். கடந்த வருடம் முழுவதும் நம்மையும் நமது திருச்சபையின் ஊழியங்களையும் ஆசீர்வதித்து வழிநடத்திய நம் தேவனை நன்றியோடு துதிப்போம்.

கடந்த மாதம் 3-ம் நாள் நாம் நடத்திய கிறிஸ்து பிறப்பு பாடல் ஆராதனை, சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகள் Habitat Private School, Al Jurf, Ajman-ல் வைத்து மிக சிறப்பாய் நடத்த கர்த்தர் கிருபை புரிந்தார். தங்களது சிறப்பான பங்களிப்பின் மூலம் விழாவைச் சிறப்பித்த திருமறைப்பள்ளி, பெண்கள் சங்கம், பாடகர் குழு ஒவ்வொன்றின் பொறுப்பாளர்கள், அங்கத்தினர்கள் மற்றும் இந்நிகழ்வுக்கான ஆயத்தங்களைச் செய்த சகோதரர்கள், உற்சாகமாய் பங்கேற்றறு சிறப்பித்த சபையார் அனைவரையும் வாழ்த்தி நன்றி கூறுகின்றேன்.

நமது திருச்சபையின் மூலம் கடந்த நவம்பர், டிசம்பர் மாதங்களில் நடைபெற்ற Christmas Carol ஊழியத்தின் மூலமாக ஷார்ஜா, துபாய், அஜ்மான், உம் அல் குவைன் மற்றும் ஜெபல் அலி பகுதிகளில் உள்ள நம் திருச்சபை அங்னகத்தினர்கள் மற்றும் நம் திருச்சபையை நேசிக்கிற அன்பானவர்கள் இல்லங்களையும் தனி நபர்களாய், நம் சகோதரர்கள் தங்கி இருக்கும் முகாம்களிலும் சென்று கிறிஸ்து பிறப்பு வாழ்த்துதலை கூறி ஜெபிக்க கர்த்தர் கிருபை புரிந்தார். இந்த ஊழியத்தில் உற்சாகமாய் பங்கேற்ற, அன்புடன் ஏற்று உபசரித்த, உற்சாகமான பங்களிப்பைத் தந்துதவிய அனைவருக்கும் நன்றிகள்.

கடந்த மாதம் 24-ம் நாள் திருச்சபையின் சார்பில் நடைபெற்ற கிறிஸ்மஸ் குடும்ப பாடல் ஆராதனையிலும் பாடல்கள் பாடி சிறப்பித்தவர்களை வாழ்த்துகிறேன். 25-ம் நாள் கிறிஸ்மஸ் சிறப்பு தொழுகையிலும் அநேகர் கலந்து சிறப்பித்தீர்கள். உங்களை வாழ்த்துகிறேன். கிறிஸ்மஸ் விழாக்கால நிகழ்வுகள் யாவும் சிறப்பாக நடைபெற கிருபை புரிந்த ஆண்டவரை போற்றுகிறேன். நல்ல ஆதரவுகளை அளித்த திருச்சபையின் விசுவாசிகள் யாவரையும் சபைக்குழுவின் சார்பில் வாழ்த்தி நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வருடம் ஜூனியர் சர்ச் மற்றும் பெண்கள் ஐக்கிய சங்கமானது இம்மாதம் 7-ம் நாள் முதல் ஆரம்பமாக இருக்கிறது. நமது திருச்சபையின் பிள்ளைகள், ஆசிரியர்கள் மற்றும் பெண்கள் சங்க உறுப்பினர்கள் யாவரும் உற்சாகமாய் பங்கேற்று பயனடைய கேட்கிறேன். இப்புதிய ஆண்டிலும் தேவன் நம்முடன் இருந்து திருச்சபையின் ஊழியங்களிலும் நமது வாழ்விலும் விரும்புகின்ற நன்மைகள் பலவற்றைத் தந்து வழிநடத்த யாவரும் ஜெபிக்கும்படி அனபோடு கேட்டுக் கொள்கிறேன்.

சபைக்குழு சார்பில்,<br>
**K. அருண்குமார்.**<br>
செயலாளர்

# பெண்கள் பகுதி

## இருதயத்தை ஊற்றியவள் 'அன்னாள்'

எப்பிராயீம் மலைதேசத்தில் வசித்த எல்க்கானாவுக்கு இரண்டு மனைவிகள் இருந்தார்கள். அவர்களில் ஒருத்திதான் அன்னாள். அன்னாள் என்ற பெயருக்கு "கர்த்தரின் கிருபை" என்பது பொருள். அன்னாளுக்குப் பிள்ளைகள் இல்லை. இந்நிலையில் அன்னாள் செய்தது என்ன? சிந்திப்போம்.

**1. இறை விசுவாசம் கொண்ட அன்னாள்:**

அன்னாளுக்குப் பிள்ளைகள் இல்லாத பிரச்சனை பல வருடங்கள் இருந்தது. ஒவ்வொரு வருடமும் எல்க்கானா கடவுளைத் தொழுதுகொள்ள சீலோவிலுள்ள ஆலயத்திற்குச் செல்வது வழக்கம். அப்படிச் செல்லும்போதெல்லாம் அன்னாளை நேசித்தபடியால், பலிபொருட்களில் இரட்டிப்பான பங்கு கொடுப்பான். அன்னாள் பிள்ளை இல்லாமல் இருந்தபடியால் அவள் சக்களத்தியான பெனின்னாள், அன்னாளின் மனம் நோகும்படி மிகவும் விசனப்படுத்துவாள். அன்னாளுக்குத் துக்கம், அழுகை, மனமடிவு, விசனம், சாப்பிட மனமின்மை இவைகளே அவள் வாழ்வு முறையாக இருந்தது. இப்போதுதான் அவளுக்கு, தனக்கு ஒரு குழந்தை வேண்டும் என்ற எண்ணம் வருகிறது. ஆலயத்தில் சென்று விசுவாசத்தோடு ஜெபிக்க ஆரம்பித்தாள். "தேவரீர் எனக்கு ஒரு ஆண் குழந்தையைக் கொடுத்தால் அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் அவனைக் கர்த்தருக்கென்று ஒப்புக் கொடுப்பேன்" என்று சொல்லி ஜெபித்தாள்.

**2. இருதயத்தை ஊற்றிவிட்ட அன்னாள்:**

அன்னாள் தன் இருதயத்தில் பேசினாள், அவளுடைய உதடுகள் மாத்திரம் அசைந்தது. இதைப் பார்த்த ஏலி ஆசாரியன், அவள் வெறித்திருக்கிறாள் என்று நினைத்து, நீ எதுவரைக்கும் வெறித்திருப்பாய்? என்று கேட்டான். அப்பொழுது அன்னாள் நான் மனக்கிலேசமுள்ள பெண், நான் கர்த்தருடைய சந்நிதியில் என் இருதயத்தை ஊற்றிவிட்டேன். உம்முடைய அடியாளைப் பேலியாளின் மகளாக எண்ணவேண்டாம் என்றாள். அதற்கு ஏலி, சமாதானத்தோடே போ, நீ இஸ்ரவேல் தேவனிடத்தில் கேட்ட உன் விண்ணப்பத்தின்படி அவர் உனக்கு கட்டளையிடுவாராக என்றான்.

அன்னாளின் வார்த்தையில் அலங்காரம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் கண்களில் கண்ணீரும், இருதயத்தில் வியாகுலமும் இருந்தது. கண்ணீர் ததும்பும் கண்களை கர்த்தர் கவனிப்பார். அவள் தன் இருதயத்தை உடைத்து ஊற்றியதை ஏலி தவறாக நினைத்திருக்கலாம். ஆனால் அவள் உள்ளத்தை இறைவன் அறிந்தார்.

**3. இறைவனின் ஆசி பெற்ற அன்னாள்:**

இறைவன் அன்னாளின் விண்ணப்பத்தைக் கேட்டு ஒரு குமாரனைக் கொடுத்தார். கர்த்தரிடத்தில் கேட்டேன் என்று சொல்லி அந்தப் பிள்ளைக்கு சாமுவேல் என்று பெயரிட்டாள். அன்னாள் தான் பொருத்தனை செய்தபடி அவனைப் பால் மறக்கப் பண்ணின உடனே ஆலயத்தில் அவன் வளரும்படி இறை சமூகத்தில் கொண்டுபோய்விட்டாள். அவள், ஆசாரியன் ஏலியை அல்ல, ஆண்டவரை நம்பி தனது பிள்ளையை ஆலயத்தில் ஒப்படைத்தாள். தான் செய்த தீர்மானத்தில் உறுதியாய் இருந்தாள். மற்றவர்கள் அந்த பொருத்தனையில் தலையிடவும் அனுமதிக்கவில்லை. அவள் பிள்ளையை ஆலயத்தில் கொண்டுவிட்ட அன்று நியமப்படி உற்சாகமாய் எல்லாப் பலிகளையும் நிறைவேற்றினாள். இறை சமூகத்தில் விடப்பட்ட பிள்ளை எப்படியும் வளரட்டும் என்று அன்னாள் கரிசனையற்றவளாய் இருக்கவில்லை. ஒவ்வொரு வருடமும் அவள் ஆலயத்திற்கு பலி செலுத்த வரும்போது ஒரு சின்ன சட்டையைத் தைத்துக்கொண்டு வருவாள்.

அதுமட்டுமல்ல, மலடியை அனேகம் பெறப் பண்ணினாரே! புழுதியிலிருந்தவனை சிங்காசனத்தில் உட்காரப் பண்ணினாரே! சிறியவனை உயர்த்தினாரே! பரிசுத்தவான்களின் பாதங்களை காத்தாரே! என்று பாடல் பாடி இறைவனை மகிமைப்படுத்தினாள்.

ஆம் அன்பானவர்களே, நாமும் அன்னாளைப்போல இறைவனிடம் முழுமையான விசுவாசம் கொண்டு, பொருத்தனையோடு, ஜெபித்து, ஜெபத்தின் வழியாய் பெரிய காரியங்களைப் பெறுவோம்.

இறைவனின் நிறைவான ஆசி நம் அனைவரோடும் தங்கி இருப்பதாக. ஆமென்.

**திருமதி. ஜெனிதா சுஜின்,**
ஆயரம்மா.

# திருமறை அறிவுப்போட்டி ஜனவரி 2024

## யோபு 39-42 அதிகாரங்கள்

**(சரியான விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 24.01.2024)**

1. எதை எதினால் பிடிக்கக்கூடுமோ?
2. எது ஓடுகிற ஓட்டம் எதற்கு சமமல்ல?
3. எது எதைப்போல் எதைத் தின்னும்?
4. யார் யாருக்காக வேண்டுதல் செய்ய எது மாறியது?
5. யார் யாருடைய எதை ஆசீர்வதித்தார்?
6. எதுபோல எதிலிருந்து எது புறப்படும்?
7. எது எதற்கெல்லாம் ராஜா?
8. எது எதற்கு கனைக்கும்? எவைகளை எப்படி பிடிக்கும்?
9. எது எதில் மோதினாலும் எது அசையாது?
10. எது எப்பொழுது யாரை அசட்டை பண்ணும்?

# டிசம்பர் 2023 – சரியான விடைகள்

## யோபு 36-38 அதிகாரங்கள்

1. அதினால் அவர் செய்ய நினைக்கிறதையும், மந்தாரம் எழும்பப்போகிறதையும், ஆடுமாடுகள் அறியப்படுத்தும். (யோபு 36:33)
2. ஒன்றில் தண்டனையாகவும், ஒன்றில் தம்முடைய பூமிக்கு உபயோகமாகவும், ஒன்றில் கிருபையாகவும், அவைகளை வரப்பண்ணுகிறார். (யோபு 37:13)
3. பூமி முத்திரையிடப்பட்ட களிமண்போல் வேறே ரூபங்கொள்ளும், சகலமும் வஸ்திரம் தரித்திருக்கிறது போல் காணப்படும். (யோபு 38:14)
4. பாழும் அந்தரவெளியுமான தரையைத் திருப்தியாக்கி, இளம்பூண்டுகளின் முளைகளை முளைக்கப்பண்ணும்படி, (யோபு 38:25)

5. ஆகையால் மனுஷர் அவருக்குப் பயப்படவேண்டும், தங்கள் எண்ணத்தில் ஞானிகளாயிருக்கிற எவர்களையும் அவர் மதிக்கமாட்டார் என்றான். (யோபு 37:24)
6. அவர் தம்முடைய கண்களை நீதிமான்களைவிட்டு விலக்காமல், அவர்களை ராஜாக்களோடே கூடச் சிங்காசனத்தில் ஏறவும், உயர்ந்த ஸ்தலத்தில் என்றைக்கும் உட்கார்ந்திருக்கவும் செய்கிறார். (யோபு 36:7)
7. அக்கிரமத்துக்குத் திரும்பாதபடிக்கு எச்சரிக்கையாயிரும், உபத்திரவத்தைப் பார்க்கிலும் அக்கிரமத்தைத் தெரிந்து கொண்டீரே. (யோபு 36:21)
8. அவர் உறைந்த மழையையும், கல்மழையையும், தம்முடைய வல்லமையின் பெருமழையையும் பார்த்து: பூமியின்மேல் பெய்யுங்கள் என்று கட்டளையிடுகிறார். (யோபு 37:6)
9. அப்பொழுது விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப்பாடி, தேவபுத்திரர் எல்லாரும் கெம்பீரித்தார்களே. (யோபு 38:7)
10. அவருக்கு நாம் சொல்லத்தக்கதை எங்களுக்குப் போதியும், அந்தகாரத்தினிமித்தம் முறைதப்பிப் பேசுகிறோம். (யோபு 37:19)

## சரியான விடை அனுப்பியவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 | Mrs. ஆட்லின் ரீனா பிரபு | 10 | Mrs. கிளாட்சிலி பினுகுமார் |
| 2 | Mrs. சபிதா அருண் | 11 | Mr. பிரபாகரன் |
| 3 | Mrs. மினு பெர்மின் | 12 | Mrs. பொம்மி ராஜன் |
| 4 | Mrs. பெனிஷாசிங் | 13 | Mrs. பிரதீபா ராஜேஷ் |
| 5 | Mrs. நித்தியா வின்சென்ட் | 14 | Mrs. ஹேமா ஜெயன் |
| 6 | Mrs. ஷோபா நிரஞ்சன் | 15 | Mrs. சாலினி சுதன் |
| 7 | Mrs. ஜெனி தினகர் | 16 | Mrs. றோஸ்மின் கிருபா |
| 8 | Mrs. ஆன்லெட் ஜட்சன் | 17 | Mrs. விரோனிக்கா பால பிரகாஷ் |
| 9 | Mrs. ஜாஸ்மின் ஜஸ்டின் | | |

# KIDS STORY TIME

## A FOOLISH STAG

Dear Children,

One hot summer day, a Stag went to a pool to drink water. The pool water was clear. It could see its reflection in the water. It felt proud of its beautiful horns. But when it saw the shadow of its thin legs, it felt sad and hated them. While it was still thinking of its ugly legs, it heard the sound of the horse's hoofs of a huntsman and the barking of hounds. It ran for its life as fast as its legs could carry it. In no time it left the hounds far behind.

Now it happened to pass through a thick forest. As it rushed through, its horns got caught in the branches of a tree. It struggled hard to free itself but all in vain. Meanwhile, the hunter and his hounds came chasing it. The hounds fell upon it and killed it-The legs it hated had carried it away from the hounds while the beautiful horns brought about its death.

**Moral:** All that glitters are not gold.

**God Bless You All!!!**

# INTERESTING INTERNET

## Some Fun Facts about January

1. January is the first month of the year in both the Gregorian and Julian calendars.
2. January is a great time to watch winter wildlife, as many species are most active during this month.

3. During the ancient Roman era, the inception of January was seen as a bridge between what happened in the past and what the future will bring.
4. January brought the heaviest snowfall in the history of the United States.
5. Most relationships end in January - Not exactly a FUN fact but, January is the most familiar month when it comes to divorces and break-ups and is frequently referred to as “divorce month” by legal practitioners.
6. Pharaoh Tutankhamun’s stone sarcophagus was discovered in January - More than a year after his initial discovery, on January 3rd, 1924, Howard Carter unlocked the final shrine’s doors and displayed Pharaoh Tutankhamun’s stone sarcophagus.
7. January is the name of second-largest city in Brazil.
8. The US observes national penguin day on January 20 to raise awareness about these beautiful animals.
9. Puzzle Day is celebrated annually on January 29 - a good day for brain exercise.
10. Dry January to keep people away from liquor consumption -People in the UK participate in “Dry January.” This is an initiative to promote public health by encouraging individuals to abstain from alcohol for one month.
11. January is National Hot Tea Month, making it the perfect time to cozy up with a warm cup.
12. Monarchy ended in Hawaii in January.

13. The first-ever Emmy Awards were held on January 25, 1949.
14. National Bean Day is celebrated on January 6 in the US.
15. Epiphany, a Christian holiday, is observed on January 6th, adding to the many celebrations.

# YOUR ATTENTION PLEASE

**AS TO A LIGHT SHINING IN A DARK PLACE**

2 Peter 1:19

**WHY FORGIVE?**

Ephesians 4 : 17 – 32

Be kind to one another, forgiving each other. Ephesians 4:32

Dear Teenagers,

Greetings to you all in the name of our Lord and Saviour Jesus Christ.

Charles and Mark were engaged in the same business in New York. Mark schemed and resorted to some evil strategies and as a result, Charles' business crashed hunting him into severe loss and debt. Charles became so irritated that he was seeking ways to kill Mark. But at one point his attitude changed and he decided to forgive Mark. His friends could not digest his decision to forgive.

They said, "Why do you want to forgive him who has committed a serious crime against you?" Charles replied calmly, "As long as I remain unforgiving,

I will be the loser. He destroyed only my business but the anger I have nurtured within me, has been destroying me. Ever since I planned revenge and decided to kill him. I have been allowing all my other talents to rot and rust. My only aim in life was destroying him and, in that process, I was about to destroy myself. Hence the only way to save myself is by forgiving him. Of course, we may be exposed to great misfortune by that harm that others do for us. But, at the same time we may have to face other serious consequences if we allow this hurt to ramkle. A person who was a victim of another wickedness, went to the offender and said, 'I forgive you with all my heart.' The other one replied indifferently "I don't want your forgiveness". The victim said calmly, But I need to forgive.

We will suffer more if we allow resentment to linger in our heart. It will spoil our peace and block the flow of God's grace into our life. On the cross Jesus prayed that His offenders be forgiven. They did not regret their wrongs and repent. Why then he prayed for them? Jesus opted to do that. The hurt others inflict on us s like a wound. If we remain unforgiving, we will be poking the wound again and again, making it worse. Hence let us forgive others if not for their sake, at least for our sake.

**To Ponder**

If your love for God is not true and complete

your love for others will be incomplete.

**God Bless You All!!!**

# இறை பிரசன்னத்தில் !

***நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். (பிலிப்பியர் 4:6)***

- இயற்கைச் சீற்றங்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் நல்வாழ்வுக்காக
- போரினால் பாதிக்கப்படுகிற நாடுகளில் அமைதி நிலவிட
- உலகமெங்கும் நடைபெறும் அனைத்து ஊழியங்களுக்காகவும்
- அனைத்து தொண்டு நிறுவனங்களின் சேவைகளுக்காக
- மருத்துவர்கள், தாதியர்கள், சுகாதார பணியாளர்களுக்காக
- ஆட்சியாளர்கள் தங்கள் கடமைகளை மக்கள் நலனுக்காக செய்ய
- உலகத் திருச்சபைகளுக்காகவும், இந்திய திருச்சபைகளுக்காகவும்
- தென்னிந்திய திருச்சபை, முதன்மை பேராயர், பேராயர்கள், ஆயர்கள், திருப்பணிவிடையாளர்கள், இறைமக்களுக்காகவும்
- நமது திருச்சபைக்காகவும், திருப்பணிகள், அனைத்து குடும்பங்களின் ஆசீர்வாதத்திற்காகவும்
- அனைத்து நாடுகளுக்காகவும், அதன் தலைவர்களுக்காகவும்
- இந்திய தேசத்திற்காகவும், நாம் வாழும் UAE தேசத்திற்காகவும்
- லஞ்சம், ஊழல் செய்வோர் மனம் மாற
- விடுதிகளில் தங்கி பயிலும் பிள்ளைகளின் பாதுகாப்பிற்காக
- வாலிபர்களுக்காகவும், அவர்களின் வேலைவாய்ப்பு, திருமணத்திற்காகவும்
- வயதான பெற்றோர்களின் பாதுகாப்பிற்காகவும்
- வியாதியினால் பாதிக்கப்படுவோர் சுகம் பெற
- கடன், வறுமை, குடும்ப பிரச்சனைகளினால் அல்லலுறுவோர் விடுதலை பெற
- மனநிலை பாதிக்கப்பட்ட மக்களின் நல்வாழ்விற்காக
- கைம்பெண்கள், ஆதரவற்றோர், மாற்றுத்திறனாளிகள் வாழ்வுக்காக
- வேலைத் தேடுவோர் வேலை வாய்ப்பு பெற
- மதுபானம், போதை பொருட்களுக்கு அடிமைப்பட்டிருப்போர் வாழ்வு பெற
- தனிநபர் உறைவிடங்களில் வாழும் ஒவ்வொரு நண்பர்களுக்காக
- அனுதினம் பயணம் செய்வோரின் பயண பாதுகாப்பிற்காக
- புதிய வருடம் அனைவருக்கும் ஆசீர்வாதமாய் அமைந்திட

# தெரிந்து கொள்ளுங்கள் !

## கிறிஸ்துவுக்குள் வளருதல்

**இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான், பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின. 2 கொரிந்தியர் 5:17**

கிறிஸ்து தம்முடைய மரணத்தின் மூலமாக பிசாசின் வல்லமையின் மேல் வெற்றி சிறந்தார். தம்முடைய பூலோக ஊழியத்தின்போது பிசாசின் ஆவிகளை கட்டுப்படுத்தி, அவைகளின் வல்லமையை உடைத்து, அவைகளின் நித்திய அழிவை உறுதிப்படுத்தினார். கிறிஸ்துவின் அன்பின் நிச்சயத்திலும், சந்தோஷத்திலும், சமாதானத்திலும் அவரோடு நாம் வளரும்போது நம்மைக் கட்டுப்படுத்த நினைக்கும் பொல்லாத படைகளை வெற்றிகொள்ள அவரின் வெற்றி நமக்கு உதவுகின்றது.

பரிசுத்த ஆவியானவர் இப்பொழுது நம்மில் வாசம் செய்து கிறிஸ்துவோடு வளருவதை வலுவடையச் செய்கிறார். நம்முடைய ஆண்டவரும் இரட்சகருமாகிய கிறிஸ்துவுக்கு நம்மைத் தொடர்ந்து அர்ப்பணிக்கும்போது, நம்முடைய முற்கால செயல்களின் பாரத்திலிருந்து விடுதலை பெறுகிறோம்.

மேற்கண்ட விடுதலையைப் பெற்று அவரில் வளர அவருடைய ஆலோசனையில் நடக்கவேண்டும். நாம் எப்படி நடக்கவேண்டுமென நமக்கு ஒரு முன்னுதாரணத்தை வைத்திருக்கிறார். நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்பட வேண்டும் (1 தெச. 5:23). கிறிஸ்துவோடு நாம் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். ஒரு செடி மரக்கிளையைச் சார்ந்து வளருவது போல நாமும் கிறிஸ்துவைச் சார்ந்து வளர வேண்டும் (யோவான் 15:5-7).

ஆண்டவராகிய கிறிஸ்து வரும்போது நாம் மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபமாக்கப்படுவோம் (2 கொரி. 3:17,18). ஆகவே நம்முடைய கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருவோமாக. (2 பேதுரு 3:18)


**எப்படி வளருவது?**

- நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் **வாஞ்சையாயிருங்கள்.** 1 பேதுரு 2:3.
- இதோ, உம்முடைய கட்டளைகள்மேல் **வாஞ்சையாயிருக்கிறேன்,** உமது நீதியால் என்னை உயிர்ப்பியும். சங்கீதம் 119:40

**வசன வாஞ்சை நமக்குள் பெருகட்டும்!**
**நம் வாழ்வு கிறிஸ்துவைப் போன்றதாக மலரட்டும்!**

# சிறுவர் பகுதி...

# COLOUR THE PICTURE



# CHILDREN'S QUIZ CORNER

## (Psalms : Chapter 1-5)

1. In the __________ I plead my case to you
   a. Evening
   b. Morning
   c. Night Time
   d. Noon Time
2. O Lord make me lie down in __________
   a. Safety
   b. Peace
   c. Hope
   d. None of the above
3. __________ are those who do not follow the advice of the wicked.
   a. Blessed
   b. Wise
   c. Thankful
   d. Happy
4. But you, O Lord, are a __________ around me
   a. Refuge
   b. Sword
   c. Shield
   d. Weapon
5. Who take counsel together ?
   a. Kings
   b. Rulers
   c. Wise men
   d. None of the above
6. The Lord watches over the way of the __________
   a. Wise
   b. Good
   c. Righteous
   d. All of the above

7. __________ are all who take refuge in him

a. Happy

b. Blessed

c. Wise

d. None Thankful the above

8. You strike all my enemies on the __________

a. Head

b. Neck

c. Legs

d. Cheek

9. When you are disturbed, do not __________

a. sing

b. sin

c. make decision

d. dance

10. Who will not stand before your eyes ?

a. enemies

b. wicked

c. boastful

d. None of the above

## Children's Quiz Corner – December 2023 Answers

**Song of Songs Chapter : 5-8**

| | |
|---|---|
| 1 | c) The distinguished amound ten thousand (5:10) |
| 2 | b) Carmel (7:5) |
| 3 | c) Lebanon (5:15) |
| 4 | a) All manner of pleasant fruits, new and old (7:13) |
| 5 | a) Altogether desirable (5:16) |
| 6 | d) I am my beloved's and my beloved is mine (6:3) |
| 7 | d) None of the above (8:6) |
| 8 | c) Apple (8:5) |
| 9 | b) 60,80 (6:8) |
| 10 | c) Many waters (8:7) |

# சிறுவர் பகுதி போட்டியில் பங்கேற்றோர்

## Childrens Quiz Corner

| | | | |
|---|---|---|---|
| 1 | Fabina Jills | 11 | J. Juana Jeyan |
| 2 | Nirmlyn Fiona | 12 | Aashi B Buena |
| 3 | Sharon Sathya | 13 | Jovan Fedrick |
| 4 | Akshal Hans | 14 | Ferona Katie |
| 5 | Jesuna | 15 | N. Naolin |
| 6 | J.J. Jafflin | 16 | N. Nicolin |
| 7 | J.J. Jeffin | | |
| 8 | S. Johan Sujin | | |
| 9 | J.A. Johan Judson | | |
| 10 | R.P. Remiro | | |

## Coloring

| | | | |
|---|---|---|---|
| 1 | Bertina | 10 | R.P. Samual Raj |
| 2 | Dallan Bryant | 11 | S. Joshan |
| 3 | Shalom Sathya | 12 | Evalina Jeyan |
| 4 | Sharolin Sathya | 13 | Aafreen B. Baron |
| 5 | Steve Adrian V. N | 14 | Chris Bermin |
| 6 | Timothy Bermin | 15 | J.A. Jaran |
| 7 | Jenufiyaa | | |
| 8 | R.P. Remijo | | |
| 9 | R.P. Evalyn Reeba | | |

# கிறிஸ்தவ கீர்த்தனைக் கவிஞர்கள்

## அருள்திரு மா.வேதமாணிக்கம் (1864-1917)

அருள்திரு மா.வேதமாணிக்கம் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நெய்யூரிலிருந்து குளச்சல் செல்லும் வழியில் சுமார் இரண்டு கிலோமீட்டர் தொலைவிலுள்ள கல்லுக்கூட்டம் என்னும் ஊரில் 1864-ம் ஆண்டு மதுரநாயகம் தேவாயி தம்பதியினருக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தார். இவரது ஐந்து வயதில் தந்தையார் மதுரநாயகம் காலமானார். பக்தி மிகுந்த தேவாயி அம்மையார் பல்வேறு துன்பங்கள், சோதனைகளுக்கிடையில் மகனை தெய்வ பக்தியிலும், ஞானத்திலும் திறம்பட வளர்த்து வந்தார்.

வேதமாணிக்கம் தமது கல்வியை முடித்தபின்னர் அரசு பணியில் சேர்ந்தார். 1884-ம் ஆண்டு தமது இருபதாவது வயதில் மத்திகோடு சபையைச் சேர்ந்த இராகேல் அம்மையாரைத் திருமணம் செய்தார். இவர்கள் மண்தரை போட்ட ஓலை வேய்ந்த குடிசை வீட்டில் குடும்பத்தாருடன் வாழ்ந்து வந்தனர். ஒருநாள் இவரது மேலதிகாரியான ஆங்கிலேயர் இவரை நோக்கி, வேதமாணிக்கம் நீ வேதம் ஓத வேண்டியவன், இங்கு எப்படி வேலை செய்யலாம்? எனக் கேட்டார். இக்கேள்வி வேதமாணிக்கத்தின் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்தது. நற்செய்தி ஊழிய ஆர்வத்தினால் அரசாங்க வேலையைத் துறந்தார். பின்னர் கிறிஸ்தவ பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றலானார். நெய்யூர் போர்டிங் பாடசாலையில் பாட்டு ஆசிரியராகவும், பின் கிறிஸ்தவப் பள்ளிகளுக்கு ஆய்வாளராகவும் பணிபுரிந்தார். அதன் பின்னர் சிறிதுகாலம் மத்திகோடு சபையில் உபதேசியாராக ஊழியம் செய்து வந்தார்.

1912-ம் ஆண்டு அருள்திரு மா.வேதமாணிக்கம் அவர்கள் கல்லுக்கூட்டம் சபையின் போதகராக நியமனம் செய்யப் பட்டார். இவரது ஊழியத்தினால் திருச்சபையில் நாளுக்கு நாள் மக்கள் அதிகமாக வந்து சேர்ந்தனர். எனவே ஆலயத்தில் இடநெருக்கடி ஏற்பட்டது. அதனால் ஆலயத்தின் இரு பக்கங்களும் விரிவாக்கப்பட்டு கட்டி முடிக்கப்பட்டது. விரிவாக்கப்பட்ட ஆலயம் 1914-ம் ஆண்டு திருத்திறப்பு செய்யப்பட்டது. 1916-ம் ஆண்டு இவரது காலத்தில் சபையின் முதலாவது அறிக்கை மலர் வெளியிடப்பட்டது. இவரது ஊழியக் காலத்தில்தான் கல்லுக்கூட்டம் சபையின் முன்னாள் கிளைச் சபையான அஞ்சலிபுரம் சபை உருவாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

அக்காலத்தில் நெய்யூர் சபையின் போதகராக விளங்கிய அருள்திரு.ஹாக்கருக்கு ஊழிய உதவியாளராகவும், உற்ற நண்பராகவும் வேதமாணிக்கம் விளங்கினார். இளைஞர்களை நல்வழிப்படுத்த சுவிசேஷப் படையெழுச்சி என்னும் திறந்தவெளி கூட்டங்களை அடிக்கடி நடத்தினார். இக்கூட்டங்களில் பாடுவதற்காக "சுவிசேஷப் படையெழுச்சி கீதங்கள்" என்னும் பதினாறு பாடல்கள் அடங்கிய நூல் ஒன்றை வெளியிட்டார். மேலும் பல பாடல்களை இயற்றி இசைவழிச் செய்தியின் மூலம் மக்களை மகிழ்வித்து நெறிப்படுத்தி வந்தார். ஞாயிறுதோறும் மாலை நேரத்தில் பெண்களுக்குச் சிறப்பு வேதபயிற்சி கூட்டங்களையும் நடத்தினார். ஊர்ப்பிரச்சனைகளோ, வழக்குகளோ ஏற்பட்டால் ஊர் கூட்டம் கூடி விசாரித்துத் தீர்த்து வைக்கும் நடுவராகவும் அவர் காலத்தில் செயல்பட்டார்.

**கீர்த்தனைகள்:**

1. ஆ இன்ப காலமல்லோ
2. சர்வலோகாதிப நமஸ்காரம்
3. ஜீவவசனம் கூறுவோம்
4. என்னாலுரைக்க முடியாதே என்றன் இருதய

   என்னும் கீர்த்தனைகளையும், சிறுவர்களுக்காக இன்னிலத்தை நாடி விண்ணுலகம் விட்டு என்னும் பாடலையும் இயற்றியுள்ளார்.

அருள்திரு மா.வேதமாணிக்கம் தம்பதியினருக்கு மூன்று ஆண், மூன்று பெண் குழந்தைகள். வயலின் இவர்களது குடும்பத்தினரின் முக்கியமான இசைக்கருவியாக விளங்கியது. குடும்பத்திலுள்ள அனைவரும் பாடல் பாடுவதிலும், வயலின் வாசிப்பதிலும் வல்லவர்களாகக் காணப்பட்டதால், குடும்பமாகப் பல இடங்களுக்குச் சென்று நற்செய்திக் கூட்டங்களையும், கதாகாலட்சேபங்களையும் நடத்தி வந்தனர்.

1917-ம் ஆண்டு மே மாதம் எட்டாம் நாள் வேதமாணிக்கம் அவர்கள் மார்த்தாண்டம் என்னும் ஊரிலுள்ள தமது மனைவியின் தங்கை வீட்டிற்குச் செல்ல பேருந்தில் ஏறும்போது தவறி விழுந்தார். இதனால் இவரது காலில் காயம் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து மூன்றாம் நாளான 10-05-1917 அன்று தமது 53-வது வயதில் மரணமடைந்தார்.

அருள்திரு மா.வேதமாணிக்கம் அவர்கள் உடல் கல்லுக்கூட்டம் தேவாலயத்தில் நிகழ்த்தப்பட்ட ஆராதனைக்குப்பின் அவர்களின் குடும்ப கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

# மருத்துவப்பகுதி

## மாரடைப்பு VS அசிடிட்டி

**மாரடைப்பு VS அசிடிட்டி: கண்டறிவது எப்படி? அறிகுறிகள் என்னென்ன?**

நெஞ்சுவலி என்பது அசிடிட்டி அல்லது நெஞ்செரிச்சலாகவோ அல்லது மாரடைப்பு போன்ற பெரிய பிரச்சனையின் அறிகுறியாகவோ இருக்கலாம். இரண்டுக்குமான வித்தியாசத்தைக் கண்டுபிடிப்பது கடினம்தான். இருப்பினும் இதன் அறிகுறிகளில் வேறுபாடு இருப்பதாக மருத்துவர்கள் கூறுகின்றனர்.
மாரடைப்பு ஒரு 'சைலன்ட் கில்லர்' என்றும் அழைக்கப்படுகிறது. ஏனெனில் இது ஏற்படுவதற்கு முன்னதாக அரிதாகவே அறிகுறிகள் ஏற்படுகிறது.
அமைதியான அறிகுறிகளற்ற மாரடைப்புகள் (SMI-Silent Myocardial infrarction) ஏற்படுவது 45 சதவீதம் என்ற அளவில் இருக்கிறது. மேலும் இது பெண்களைவிட ஆண்களை அதிகம் தாக்குகிறது. அப்போது சில நேரங்களில் அமிலத்தன்மையை (அசிடிட்டி) உணரலாம் அல்லது எந்த அறிகுறிகளும் இல்லாமல் இருக்கலாம்.
பலரும் நெஞ்சுவலி அல்லது அசௌகரியம் ஏற்படுவதை இரைப்பை பிரச்சனைகளுடன் தொடர்புபடுத்துவதாக மருத்துவர்கள் கூறுகின்றனர். அப்போது உடனடியாக மருத்துவரை அணுகுவதில்லை. இதனால் ஆண்டுதோறும் உலகம் முழுவதும் குறைந்தது 1.8 கோடி இறப்புகள் ஏற்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

**மாரடைப்பு VS அசிடிட்டி**

அசிடிட்டி அல்லது நெஞ்செரிச்சல் ஏற்படும்போது நெஞ்சு எரிவது போன்ற ஒரு உணர்வு ஏற்படுகிறது. மாரடைப்பும் அப்படித்தான். ஆனால், சில அறிகுறிகளைக் கண்காணிப்பதன் மூலமாக இரண்டையும் வேறுபடுத்த முடியும் என்கின்றனர் நிபுணர்கள்.

- அசிடிட்டி என்றால் நெஞ்சின் மேல்பகுதி கனமாகத் தோன்றும். வாய் புளிப்பு அல்லது கசப்புத்தன்மை கொண்டிருக்கும்.
- அசிடிட்டி ஏற்பட்டால் வயிற்றில் உள்ள உணவு கொஞ்சமாக மேலெழும்பி வரும்.

- ஆனால் மாரடைப்பு எப்போதுமே மார்பு வெடிப்பது போன்ற அழுத்தத்தைக் கொடுக்கும். மார்பிலிருந்து தோள்பட்டை, கழுத்து, தாடை மற்றும் முதுகு வரை வலி ஏற்படும்.
- மேலும், மாரடைப்பு ஏற்பட்டால் மூச்சு திணறல் வரும். உடனே வியர்வை, தலைச்சுற்றல் ஏற்படும். இந்த அறிகுறிகள் இல்லாமலும் இருக்கலாம்.
- எங்கு வலி ஏற்படுகிறது என புரிந்துகொள்ள முடியாது. ஆனால் மார்பின் நடுவில் ஒரு அசௌகரியத்தை உணர்ந்தால் அது மாரடைப்புதான் என்கின்றனர்.

**எப்போது என்ன செய்யவேண்டும்?**

உடற்பயிற்சி செய்தாலோ அல்லது கடுமையான உடற்பயிற்சி செய்தபின்னரோ அல்லது எந்த சூழ்நிலையிலும் மார்பில் வலி உணர்ந்தாலோ உடனடியாக மருத்துவரிடம் செல்லவேண்டும்.

**செரிமான பிரச்சனைகள் மார்பு வலியை ஏற்படுத்துமா?**

உங்கள் உணவுக்குழாயில் ஏற்படும் தசைப்பிடிப்பு, நெஞ்சுவலியை ஏற்படுத்தலாம். கொழுப்பு உணவுகளை சாப்பிட்ட பிறகு, பித்தப்பையில் ஏற்படும் வலி, மார்பில் பரவி, கடுமையான குமட்டல், வயிற்றின் மேல்பகுதி அல்லது வலது பக்கத்தில் வலியை ஏற்படுத்தலாம். இந்த வலி தோள், கழுத்து அல்லது கைகள் வரை பரவலாம். உறுதியாகத் தெரியவில்லை என்றால், உடனடியாக மருத்துவரை அணுகவேண்டும்.

**திருமதி. சபிதா அருண்குமார்**

# பிறந்தநாள் வாழ்த்துக்கள்

***கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வால வயதுபோலாகிறது*** (சங்.103:5)

| Sl.No | Name | Date of Birth |
|---|---|---|
| 1 | Mr. C. Kiruba Darwin | 3 |
| 2 | Mr. Thesingh | 3 |
| 3 | Master. A. S. Akshel Hans, S/o. Mr. K. Arun Kumar | 9 |
| 4 | Ms. V. Vins, S/o. Mr. N. Vincent | 9 |

| | | |
|---|---|---|
| 5 | Mrs. V. G. Nithya, W/o. Mr. N. Vincent Lal | 13 |
| 6 | Mr. John Solomon | 14 |
| 7 | P. Ricky Abner Kumar, S/o. Mr. Prem Titus | 14 |
| 8 | Mr. J. Justin | 17 |
| 9 | Mr. Justin Singh D | 18 |
| 10 | Mrs. Amala, W/o. Mr. Bennet E | 18 |
| 11 | Mr. Arun D | 21 |
| 12 | Mr. K. Jovan Fredrick, S/o. Mr. Kiruba Darwin | 25 |
| 13 | Mr. J. M. Sujin | 26 |
| 14 | R. Emi Francy, D/o. Mr. Russal Raj | 28 |
| 15 | Ms. M. Hanna Shyolin, D/o. Mr. J. Melvin Devis | 29 |
| 16 | Ms. Berniha Stalin, D/o. Mr. Stalin Moses | 29 |
| 17 | Ms. Adlin Sheya, D/o. Mr. Shibu Kumar R.S | 30 |
| 18 | Ms. Venvina. V, D/o. Mr. Vino M | 30 |

# திருமணநாள் வாழ்த்துக்கள்

*வானத்தையும் பூமியையும் படைத்த கர்த்தராலே நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் (சங்.115:15)*

| Sl.No | Name | Wedding Day |
|---|---|---|
| 1 | Mrs. & Mr. Binu Kumar Jeba Bella | 11 |
| 2 | Mrs. & Mr. Vipin Stalin Viola | 17 |
| 3 | Mrs. & Mr. G. Belfred Jose Jinitha Malar | 21 |
| 4 | Mrs. & Mr. T. Jegan Singh Sunitha | 23 |
| 5 | Mrs. & Mr. Andrew Samuel Monee Subha | 23 |

# 2024

## Happy New Year


**SHARJAH TAMIL CONGREGATION** (CSI KANYAKUMARI DIOCESE)

P.O. BOX : 36378, Sharjah, U.A.E. TEL. : 06-5680727, Mobile : 050-936 7576